**East Ham Labour Party**
104 Katherine Road
East Ham
London
E6 1EN
20 April 2010

அன்புடையீர்,

கடந்த ஆண்டுகளில் இலங்கையில் இடம்பெற்ற போரில் ஈஸ்ட்ஹாம் பகுதியில் வாழ்கின்ற பல தமிழ் மக்களின் உறவுகள் தாயகத்தில் உயிரிழப்புக்களையும், பாதிப்புக்களையும் எதிர்கொண்ட போது அவர்களின் துயர்களில் பங்குபற்றியிருந்தேன்.

இலங்கையில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அங்கு போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என முதல் குரல் கொடுத்த உலகத் தலைவர் கோர்டன் பிறவுன் ஆவார்.

திறைசேரியின் செயலாளர் என்ற அடிப்படையில் கடந்த ஆண்டு ஜீலை மாதம் பிரித்தானியாவின் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவைச் சந்தித்து, சர்வதேச நாணய நிதியத்தின் சிறிலங்காவுக்கான 2.6 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி குறித்து விவாதித்திருந்தோம்.

இச்சந்திப்பில் போருக்குப் பின்னரான மக்களின் நிலைமைகள் குறித்து அவர்களுக்கு எடுத்துக் கூறி இக்கடனை சிறிலங்காவுக்கு வழங்காது செய்திருந்தோம்.

இவ்வருடம் சிறிலங்காவுக்கான ஏற்றுமதி வரிச் சலுகையை தற்காலிகமாக இடைநிறுத்துவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் எடுத்திருந்த முடிவுக்கு முழுமையான ஆதரவு வழங்கியிருந்தோம்.

அத்துடன், சிறிலங்கா அரசின் போர் குற்றம் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட்டும் வலியுறுத்தியிருந்தார்.

2008ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்திலிருந்து போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக 13.5 மில்லியன் பவுண்ஸை பிரித்தானிய தொழிற்கட்சி அரசு வழங்கியிருந்தது.

போரின் இறுதி காலப்பகுதியில் சிறிலங்கா அரசு மேற்கொண்ட போர் குற்றங்கள் தொடர்பில் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை தொழிற்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வலியுறுத்தியுள்ளது.

ஆனால் இதுகுறித்து கொன்சவட்டிவ் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எதுவும் குறிப்பிடவில்லை. இக்கட்சியின் பாதுகாப்புப்

பேச்சாளர் லியாம் பொக்ஸ் கடந்த வருடம் மூன்று தடவை சிறிலங்காவுக்கு சென்றிருந்த வேளையிலும், இத்தகைய விவகாரங்கள் குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை.

இவர் சிறிலங்காவுக்கான இறுதி இரண்டு விஜயங்களையும் சிறிலங்கா அரசின் நிதியுதவியுடனேயே மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இதுகுறித்து அவர் உரிய காலப்பகுதியில் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கவில்லை.

மே மாதம் ஆறாம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் நான் மீண்டும் வெற்றி பெற்றால் ஈஸ்ட்ஹாமில் வாழ்கின்ற தமிழ் சமூகத்தின் நலன்களுக்காக தொடர்ந்தும் கடுமையாக உழைப்பேன் என்பதை உறுதியாகத் தெரிவிக்கின்றேன்.

குறிப்பாக, இலண்டன் தமிழ்ச் சங்கம் மற்றும் தமிழ் சமூகநல நிறுவனம் (Newham) ஆகிய நிறுவனங்களுடனும் இணைந்து தொடர்ந்து பணியாற்றுவேன். தமிழ் சமூகநல நிறுவனத்தின் (Newham) தமிழ் புத்தாண்டு நிகழ்ச்சியில் நான் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக கலந்து கொண்டு வருகின்றேன். நான் மீண்டும் மே மாதம் 15ஆம் திகதி அங்கு சமூகமளிப்பேன்.

தயவுசெய்து இத்தேர்தலில் உங்களுக்குரிய ஐந்து வாக்குகளை நாடாளுமன்ற உறுப்பினராக என்னையும், நகர முதல்வராக Sir Robin Wales யும், உள்ளூர் சபைக்கு மூன்று தொழிற்கட்சியின் வேட்பாளர்களையும் வெற்றி பெறச் செய்வதற்கு உபயோகியுங்கள்.

தங்கள் உண்மையுள்ள

ஸ்டீபன் டிம்ஸ்
ஈஸ்ட்ஹாமுக்கான தொழிற்கட்சி வேட்பாளர்.